**Spl.SC.No. 53/2022** Dated:. 30.01.2026

( எதிரி ஆஜர்)

**அ.சா.1 சின்ன குப்புசாமி த/பெ. கிருஷ்ணமாச்சாரி**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

ஒரு குற்றம் நிகழ்ந்திருக்கிறது என்றால் அதுகுறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் நீதிமன்றத்திற்கும் தெரிவிக்க வேண்டும் என்றால் உயர் அதிகாரிகளுக்கு மட்டும் தெரிவித்தால் போதும். அதுசம்பந்தமாக மூன்று நகல்கள் தயாரிக்கப்பட்டு குற்ற நமுனா சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். குற்ற நமுனா சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றால் காவல்துறையினர்தான் அனுப்பி வைப்பார்கள். இந்த வழக்கில் குற்ற நமுனா காவல்துறைக்கு கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. Child Helpline மூலமாகத்தான் எங்களுக்கு தகவல் கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். Child Helpline மூலமாக வரும் தகவல் யார் மூலம் வந்தது, எந்த எண்ணில் இருந்து வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ஞாபகமில்லை. வட்டாட்சியருக்கு தகவல் கொடுக்கும்போது அவர் எழுத்துமூலமான அனுமதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் களப்பணியாளர்கள் என்பதால் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்துவிட்டு செல்லலாம். தகவல் கிடைத்தபோது நான் எங்கிருந்தேன் என்றால் பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தேன். வட்டாட்சியர் அலுவலகத்தில்தான் வட்டாட்சியர் இருப்பார் என்றால் சரிதான். வட்டாட்சியர் அலுவலகத்தில் நான் இருந்ததால் வட்டாட்சியரிடம் நான் நேரடியாக எழுத்து்மூலமாக தகவல் தெரிவித்து அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. வட்டாட்சியர் அலுவலத்தில்

இருந்ததால் நான் செங்கல் காளவாசலுக்கு சென்றேன் என்றால் சரிதான். நாங்கள் காளவாசலுக்கு சென்றபோது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 5.20 இருக்கும். வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து காளவாசல் எத்தனை கி.மீ இருக்கும் என்றால் 14 கி.மீ. நாங்கள் காளவாசலுக்கு சென்றபோது குழந்தைகள் நல குழும அதிகாரிகள் இருந்தார்கள். நான் சென்ற 5 நிமிடத்தில் வருவாய் கோட்டாட்சியர் வந்தார். நான் காளவாசலில் யாரையாவது விசாரித்தேனா என்றால் இல்லை. வருவாய் கோட்டாட்சியர் பெயர் தெரியுமா என்றால் முருகன். வருவாய் கோட்டாட்சியர் முருகன்தான் விசாரித்து வாக்குமூலங்கள் வாங்கினார் என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியரின் அறிவுரையின்பேரில்தான் நான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் ஒரு பரிந்துரை கடிதம் கொடுத்து அதையும் காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் ஞாபகமில்லை. நாங்கள் விசாரித்தபோது அக்கம்பக்கம் உள்ள கிராமத்தை சேர்ந்தவர்கள் வந்து பார்த்தார்கள் என்றால் சிலபேர் இருந்தார்கள். மீட்கப்பட்டதாக சொல்லப்படும் மூன்று குழந்தைகளும் பள்ளியில் படித்துகொண்டிருந்தார்கள் என்றால் ஒரு குழந்தை மட்டும் படித்துகொண்டிருந்தார். அந்த மூன்று குழந்தைகளின் பெயர் விவரங்கள் தெரியாது என்றால் ஒரு குழந்தையின் பெயர் சங்கீதா, மற்ற இரண்டு குழந்தைகளின் பெயர்கள் சக்திவேல், சரண்யா. சரண்யாதான் படித்துக்கொண்டிருந்தார் என்றால் ஆமாம். சகாதேவன் வருவாய் கோட்டாட்சியர் விசாரணையின்போது கடந்த 6 வருடங்களாக சேம்பரில் வேலை பார்த்து வந்ததாக சொன்னார். இந்த வழக்கு சம்பவம் சம்பந்தமாக ஒரு தனியறிக்கை தயார் செய்து எனது மேல் அதிகாரிகளுக்கோ நீதிமன்றத்திற்கோ சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. எனது அன்றாட

பணி குறித்து நாட்குறிப்பில் எழுதப்பட வேண்டும் என்றால் முன்பு இருந்தது. இப்போது இல்லை. அன்றாட பணிகள் தவிர்த்து வேறுபணிகளுக்கு செல்லும்போது வட்டாட்சியருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் குறித்து அவ்வாறு தனியறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. ஒரு சம்பவம் குறித்து விசாரணை செய்யும்போது எழுத்துமூலமாக வாக்குமூலம் பெறவேண்டும் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றும் நான் யாரையும் பார்க்கவில்லை என்றும் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், எனக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வருவாய் துறையினருக்கும் மண் எடுப்பது சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றும் அதை முன்னிட்டு எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக இப்படி ஒரு வழக்கை காவல்துறையினரின் துணையோடு பதிவு செய்திருக்கிறோம் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி யாரையும் கொத்தடிமையாக வைத்துக்கொள்ளவில்லை என்றும் இந்த வழக்கு வருவாய் அதிகாரிகளால் பொய்யாக புனையப்பட்ட வழக்கு என்றும் அதற்கு ஏதுவாக அதிகாரிகளுடைய நிர்பந்தத்தின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.30 18:26:17 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

**Spl.SC.No. 53/2022** Dated:. 30.01.2026

( எதிரி ஆஜர்)

**அ.சா.2 இராமலெட்சுமணன்**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கு சம்பவம் குறித்து தகவல் கிடைக்கும்போது நான் எங்கிருந்தேன் என்றால் கிராம நிர்வாக அலுவலருடன் பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தேன். அப்போது வட்டாட்சியர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தாரா என்றால் இல்லை. வெளிப்பணியில் இருந்தார். துணை வட்டாட்சியர் அலுவலகத்தில்தான் இருந்தார் என்றால் சரிதான். வட்டாட்சியரிடமோ, துணை வட்டாட்சியரிடமோ எழுத்து மூலமாக அனுமதி பெற்று சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் அங்கு சென்றபோது வருவாய் கோட்டாட்சியர் இல்லை, குழந்தைகள் நல குழும அதிகாரிகள் இருந்தார்கள். நாங்கள் சென்ற 5 நிமிடங்கள் கழித்து வருவாய் கோட்டாட்சியர் வந்துவிட்டார். குழந்தைகள் நல குழும அதிகாரிகள் அங்குள்ளவர்களிடம் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். குழநதைகள் நல குழும அதிகாரிகள் வாக்குமூலங்களை எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். குழநதைகள் நல குழும அதிகாரிகள்தான் எங்களுக்கு தகவல் சொல்லி நாங்கள் அங்கு சென்றோம் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலரோ நானோ தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை. வருவாய் கோட்டாட்சியர்தான் விசாரித்தார். வருவாய் கோட்டாட்சியரின் தகவலின்பேரில் சத்திரக்குடி போலிசாரும் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். போலிசாரும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். மூன்று குழந்தைகளும் அங்குள்ள

பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார்கள் என்ற விவரம் எங்களுக்கு தெரிய வந்தது என்றால் சரண்யா என்ற பெண் குழந்தை மட்டும் படித்துக்கொண்டிருந்தார். மற்ற இரண்டு குழந்தைகளுக்கும் 17 வயது இருக்கும் என்றால் சரிதான். காளவாசல் பணி சாதாரண ஆபத்து இல்லாத வேலை என்றால் சரிதான். காளவாசலுக்கு மண் அடிப்பது சம்பந்தமாக ஏற்கனவே எதிரிக்கும் போலிசாருக்கும் மற்றும் வருவாய் துறையினருக்கும் இடையில் பிரச்சனைகள் இருந்து வந்தது என்றால் சரிதான். காளவாசலில் வைத்து பாதிக்கப்பட்ட சகாதேவனும் போலிசாரிடம் ஒரு மனு கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றும் நான் யாரையும் பார்க்கவில்லை என்றும் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், எங்களுக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வருவாய் துறையினருக்கும் மண் எடுப்பது சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றும் அதை முன்னிட்டு எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக இப்படி ஒரு வழக்கை காவல்துறையினரின் துணையோடு பதிவு செய்திருக்கிறோம் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி யாரையும் கொத்தடிமையாக வைத்துக்கொள்ளவில்லை என்றும் இந்த வழக்கு வருவாய் அதிகாரிகளால் பொய்யாக புனையப்பட்ட வழக்கு என்றும் அதற்கு ஏதுவாக அதிகாரிகளுடைய நிர்பந்தத்தின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.30 18:26:23 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)